**O.S.No. 33/2022 நாள் 01.07.2025 PW 1 – திருமதி. மல்லிகா.**

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (1 முதல் 5 பிரதிவாதிகள்தரப்பில்)

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனது தகப்பனார் கடற்கரையாண்டி நாடார் இறக்கும்போது நாங்கள் அனைவரும் மைனர்கள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்களில் 1 முதல் 5 பிரதிவாதிகள் நாராயணன் நாடார் மட்டுமே ஆண் வாரிசு என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அப்பா சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் எத்தனை சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 3 சொத்துக்கள். வழக்கில் குறிப்பிட்டுள்ள 3 சொத்துக்களில் விவசாயம் நடந்து வருகிறதா அல்லது காலியாக உள்ளதா என்றால் காலியாகதான் உள்ளது, தற்போது விவசாயம் நடக்கவில்லை. நான் சொத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கிலும், நிரூபணவாக்குமூலத்திலும் சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில், சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் சந்திரபுஷ்பம் என்பவர் ஏமாற்றி வாங்கிவிட்டார். தபசில் சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் உள்ளதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும். எனக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்றால் 1988 ஆம் ஆண்டு நடந்தது. என் அக்கா ராமலெட்சுமிக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1982 ல் நடந்தது. வழக்கின் 6 ம் பிரதிவாதி கிருஷ்ணவடிவுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 1991 ல் நடந்தது. என் அப்பா இறந்த பிறகு எங்களுக்கு எல்லாம் திருமணம் முடித்து வைத்தது என் அண்ணன் நாராயணன் நாடார் என்றால் சரிதான். அவர் எங்களுக்கு நகைகள் மற்றும் சீர்சீராட்டுகள் செய்து திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். தபசில் சொத்தை எங்களுக்கு திருமணம் செய்ததால் ஏற்பட்ட கடன்களை அடைப்பதற்காக வாய்மொழியாக சொத்தை என் அண்ணனுக்கு கொடுத்துவிட்டோம் என்றால் இல்லை. எங்கள் திருமணத்திற்கு ஏற்பட்ட கடன்களை அடைப்பதற்காக நாங்கள் 18.12.1989 ஆம் தேதி வாய்மொழியாக பாக விடுதலை செய்து கொடுத்துவிட்டோம் என்றும் அதன்படி எனது சகோதரர் நாராயணன் நாடார் 01.01.1991 ஆம்தேதி தபசில் சொத்துக்களை 7 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, என் அண்ணன் கொடுத்த கிரையம் பற்றி எனக்கு தெரியும் என்றால் அது பற்றிதெரியாது. என் அண்ணன் கிரையம் கொடுத்த விவரம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் அவர் இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்பு தெரியவந்தது. 01.01.1991 ஆம் தேதியே 7 ம் பிரதிவாதிக்கு என் அண்ணன் கிரையம் கொடுத்த விவரம் தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1991 ஆம் ஆண்டு கிரையம் கொடுத்ததால் தபசில் சொத்து கூட்டு அனுபவத்தில் இருந்ததாக சொல்வது

பொய் என்றால் சரியல்ல. தபசில் சொத்து ஒருபோதும் கூட்டு அனுபவத்தில் இருந்தது கிடையாது என்றுசொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் இறந்தபிறகு எனது அண்ணன் கர்த்தா என்ற முறையில் எங்களை திருமணம் செய்து கொடுத்து எங்களை பராமரித்து வந்தார் என்றும், அதனால்தான் தபசில் சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான், எனது அக்கா, 6ம் பிரதிவாதி கிருஷ்ணவடிவு ஆகியோர்கள் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தபிறகு என் அண்ணன்தான் வேலை பார்த்து வந்தார் என்றும், என் அம்மா வீட்டில்தான் இருந்தார் என்றால் இல்லை, என் அம்மாவும் வேலை பார்த்தார், நாங்களும் வேலை பார்த்தோம். என் அண்ணன் கிரையம் கொடுத்த 7ம் பிரதிவாதி சந்திரபுஷ்பம் எங்கள் உறவினர் என்றால் சரிதான். தபசில் சொத்தை நான் கடைசியாக எப்போது போய் பார்த்தேன் என்றால் வருடம் வருடம் சென்று பார்த்து வருவேன். தபசில் சொத்தை 7ம் பிரதிவாதி வேறு ஒரு நபருக்கு கிரையம் கொடுத்துவிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தபசில் சொத்தை 7ம் பிரதிவாதி வேறு ஒரு நபருக்கு கிரையம் கொடுத்துவிட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் அவர்கள் யாரும்எங்களிடம் பேசமாட்டார்கள், அதனால் எங்களுக்குதெரியாது. 7ம் பிரதிவாதி தபசில் சொத்தை வேறு ஒருநபருக்கு விற்பனை செய்ததால் அவர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சொத்தை வாய்மொழியாக விட்டுக்கொடுத்துவிட்டு தற்போது பொய்யான சங்கதிகளை கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தபசில் சொத்து 1991 ஆம் ஆண்டே என் அண்ணன் விற்பனை செய்துவிட்டார் என்றும், அதனால் பாக பிரிவினை மட்டுமே கேட்கக்கூடாது என்றும், விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் சொல்லியுள்ள வழக்குமூலங்கள் எல்லாம் பொய்யானது என்றால் சரியல்ல. தபசில் சொத்து கூட்டு அனுபவத்தில் இல்லாததால் நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கில் பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளதால் Suppression of material facts என்று கோட்பாடின் படி தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தபசில் சொத்து 1991 ஆம்ஆண்டு விற்பனை செய்தது 6ம் பிரதிவாதிக்கு, எங்களுக்கு, என் அம்மாவிற்கு நன்றாக தெரியும் என்றும், அதனால் காலாவதி தோஷத்தால் பாதிப்படையக்கூடியது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் சர்வே எண் மற்றும் அளவுகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி என் வழக்கறிஞரிடம்தான் கேட்க வேண்டும். வா.சா.ஆ-1 ஆவணதை வைத்து எல்கை மால் குறிப்பிட முடியாது என்றாலும், 1991 ஆம் வருடத்திய கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்கை மால்தான் தற்போது பிராதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதனால் தபசில் சொத்தை விற்பனை செய்த விவரம் தெரிந்தும், தற்போது பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வா.சா.ஆ-1

ஆவணத்தை தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வில்லங்கசான்றிதழை தாக்கல் செய்தால் ஏற்கனவே விற்பனை செய்த விவரம் நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதால் வில்லங்கசான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல. என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள், 8,9 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை மறுத்து கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 7ம் பிரதிவாதி சந்திரபுஷ்பம் இடைஞ்சல் செய்ததாக கூறியுள்ள நிலையில், என்ன மாதிரி இடைஞ்சல் செய்தார் என்று கூறவில்லை என்றால் தபசில் சொத்தை கிரையம் வாங்கியதால் இடைஞ்சல் செய்ததாக வழக்குதாக்கல் செய்துள்ளோம். 10.09.2021 அன்று 7ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்ததாக சொல்லியுள்ளதற்கு காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி ஒருபோதும் எங்களை இடைஞ்சல் செய்தது கிடையாது என்றும், அதனால்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.